வருகிறது. ஏற்கனவே பழைய திட்டத்தின்கீழ் ரூ. 1,200 இனமாகவும், ரூ. 400 கடனாகவும் கொடுக்கப்பட்டு, ரூ. 1,600 மதிப்பீட்டில் வீடு கட்டப்படுகிறது. அந்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. அந்த வீட்டை அப்படியே திருத்தி அமைக்க வேண்டுமானால் ரூ. 4,000-ம் சேர்ந்து ரூ. 5,600 ஆகிவிடும். அநேகமாகச் சட்டச் சிக்கல் வரும். அது முடியாது.

ஜெயபுரத்தில் அரிசனக் குடியிருப்பு.

* 245 வினா—**திரு. டி. சி. திம்மராய கவுண்டர்:** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஜெயபுரம் கிராமத்தில் அரிசன காலனி அமைக்க அரசு ஆர்ஜிதம் செய்துள்ள நிலத்தைத் தனியார் ஆக்கிரமித்துள்ளார் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில்; அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

அம்பேத்கார் கலைக்கல்லூரி, சென்னை

* 226 வினா—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975-76-ம் கல்வி ஆண்டில் சென்னை டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக்கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம், வரலாறு, பி.எஸ்ஸி. கணிதம், இயல்பியல் போன்ற பாடங்கள் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, அடுத்த கல்வி ஆண்டிலாவது பி.ஏ, பி.எஸ்.ஸி, பி.காம் வகுப்புகளைத் துவங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1975-76-வது ஆண்டு பட்டப் படிப்பு துவங்குவதற்காக நம்முடைய நிதிநிலைத் திட்டத்தில் ரூ. 3,22,000 ஒதுக்கப்பட்டது. அந்த